Registered as a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 26 (10 - 08 - 1992) திங்கட்கிழமை ஓசை 174

## புதிய ராணுவத் தளபதிகள் வடபகுதிக்கு நியமனம்

நேற்று முன்தினம் அராலியில் புலிகளினால் நடத்தப்பட்ட கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட வடபிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இடத்திற்கு பிரிகேடியர் ஜோன் ரணவத்த நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் யாழ் பிராந்திய தளபதி பிரிகேடியர் விஜயவிமல ரட்ணவின் இடத்திற்கு பிரிகேடியர் அசோகா ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். இவ் விருவரும் கிழக்கு மாகாணத்திலிருந்தும்கொழும்பிலிருந்தும் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ள உடனடியாக வடபகுதிக்குச் சென்றுவிட்டதாகபாதுகாப்புஅமைச்சு வட்டாரங்கள்தெரிவித்தன.

# சிங்கள தேசம் சோகத்தில் மூழ்கியது

# தளபதிகளின் சாவால் மக்கள் அதிர்ச்சி

### ஆதரவாளர் வீரச்சாவு

மூதூர் கதியால் சேனை என்னும் இடத்தில் 07-08-1992 அன்று விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த புண்ணியம் பாலசிங்கம் (வயது 35- ஈச்சிலம்பத்தை பூனகர் என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கொழும்பு எங்கும் வெள்ளைக்கொடி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது சிரேஷ்ட அதிகாரிகள் கொல்லப்பட்டமை சிறிலங்காவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இம்மரணங்கள் குறித்து சோகத்தில் மூழ்கியுள்ள சிங்கள தேசத்தில் இந்த உயர் அதிகாரிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பல பாகங்களிலும் உள்ள அரச கட்டடங்களிலும், வீடுகளிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதிகள் மரணமான செய்தி கேள்விப்பட்டதும் பெருமளவில் வீதிகளிலும், பொதுவிடங்களிலும் கூடிய சிங்கள மக்கள் தளபதிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பொது இடங்களிலும் அரச கட்டடங்களிலும், வீடுகளிலும் கொடிகளைப் பறக்கவிட்டனர். இதில், பொதுவாக அரச கட்டடங்களில் தேசியக் கொடி அரைக்கம்பத்திலும், தனியார் கட்டடங்களில் வெள்ளைக்கொடிகள் அரைக்கம்பத்திலும் பறக்கவிடப்பட்டன.

இதேவேளை, வாகனங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டதுடன், இறந்த இராணுவத் தளபதிகளின் புகைப்படங்களும் வாகனங்களில் ஒட்டப்பட்டிருந்தன. அனுராதபுரம், வவுனியா தெற்குப் பகுதியிலும் பெருமளவில் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

இந்த இராணுவத்தளபதிகளின் இழப்பு ஏனைய பகுதிகளைவிட மலையகத்திலேயே பெரும்சோகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், மலையக நகரங்களில் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதாகவும்செய்திகள் தெரிவிக்கின்றன.

## தேசியதுக்கதினம் அனுஷ்டிக்க சிறிமாவோ அரசைவலியுறுத்து

கண்ணிவெடியில் சிக்கி இறந்த மேஜர் ஜெனரல்டென்சில் கொப்பேகடுவ உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்காகத் துக்கதினம்அனுஷ்டிக்கும் வகையில் ஒரு நாளை தேசிய துக்கதினமாகப் பிரகடனம் செய்யும்படி சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசைக் கேட்டுள்ளது.

இந்த வேண்டுகோளைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்துள்ளார். வீடுகளில் வெள்ளை நிறக்கொடியைப் பறக்க விடும்படியும் மக்களுக்குச் சிறிமாவோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சிங்கள ராணுவ வரலாற்றில் சந்தித்திராத பேரிழப்பு

### டி. பி. விஜயதுங்கா அஞ்சலி

(கொழும்பு)

ஊர்காவற்றுறையில் கொல்லப்பட்ட படையினரின இல்ல

## தளபதிகளுக்கு அஞ்சலி செலுத்த தலை நகர் நோக்கி மக்கள் திரள்

### இன்று கொப்பேகடுவவின் இறுதிக்கிரியை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறிலங்கா இராணுவ தளபதிகளுக்கு அஞ்சலி செலுத்த தென்பகுதியின் பல பாகங்களிலும் இருந்து பெருந்தொகையான மக்கள் தலைநகரை நோக்கி சென்றவண்ணம் உள்ளனர்.

டென்சில் கொப்பேகடுவ பிறந்த ஊரான மலையகத்திலிருந்தே பெருமளவான மக்கள் அஞ்சலி செலுத்த வந்துள்ளனர்.

இவர்களது வாகனங்களில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டுள்ளனர். மறைந்த தளபதிகளின் புகைப்படங்களும் ஒட்டப்பட்டுள்ளன. மறைந்த தளபதிகளின் உடல்கள் மக்கள் அஞ்சலிக்காக தலைநகரில் உள்ள அவர்களின் சொந்த இல்லங்களில் வைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் பல மணிநேரம் காத்திருந்தனர் எனக் கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட தளபதி டென்சில் கொப்பேகடுவவின் உடல் தகனக்கிரியைக்காக இன்று மாலை றொஸ்மீட் பிளேஸில் உள்ள அவரது இல்லத்திலிருந்து கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது. இவரது இறுதி ஊர்வலம் வோட் பிளேஸ் ஊடாக டி. எஸ் சேனநாயக்காமாவத்தை வீதிவழியாக எடுத்துச்செல்லப்படவுள்ளது. ஏனைய இராணுவ அதிகாரிகளின் உடல்கள் நாளையும், நாளை மறுதினமும் தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### சோகத்தின் விளிம்பில் பிரதமர் விஜயதுங்கா

(கொழும்பு)

இந்த உலகில் சிறிய காலமே தங்கியிருக்கும் நாங்கள் ஏன் ஒருவருடன் ஒருவர் சண்டை போடுகிறோம். ஏன் ஒருவர் மேல் ஒருவர் குறை காண்கிறோம் என்பது எமக்குப் புரியவில்லை என்று இராணுவ அதிகாரிகளின்மரணச்செய்திஎட்டியதும் பிரதமர் டி. பி. விஜயதுங்கா கூறினார்.

பிரதமர் விஜயதுங்கா மருத்துவ மனை ஒன்றைத் திறந்து வைக்கும் வைபவம் ஒன்றில் ஈடுபட்டிருந்தபோது அவருக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டதாகவும், இந்தச் செய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை;

கப்பட்டுள்ளன. இவர்களுக்கு

காரிகளின்மரணச்செய்திஎட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள ராணுவ வரலாற்றில் சந்தித்திராத பேரிழப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவம் தனது வரலாற்றில் சந்தித்த இழப்புகளில் மிக மோசமான இழப்பை நேற்று முன்தினமே சந்தித்துள்ளது என கொழும்பில் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளதாக பி. பி. சி. நேற்றிரவு தெரிவித்தது.

கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த இராணுவத் தளபதிகளுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்பட்டாலும் மிகவும் பயிற்சி பெற்ற இந்த அதிகாரிகள் இல்லாத நிலையை தம்மால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தாக்குதலில் உயர் அதிகாரிகள் உயிரிழந்திருப்பது இராணுவத்திற்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இறந்த தளபதிகளுக்கு பதவி உயர்வுகள

ஊர்காவற்துறை - அராலிச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் பலியாகிய வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவிற்கு லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 1990இல் மேஜர் ஜெனரலாக இவர் பதவி பெற்றிருந்தார்.

யாழ். பிராந்தியத்தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்ணாவிற்கு மேஜர் ஜெனரல் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கடற்படை பிராந்திய தளபதி சி. ஏ. மொகான் ஜெயமானவிற்கு ரியர் அற்மிரல் பதவி உயர்வு வழங்கப்பட

(4 ஆம பக்கம பார்கக)

## டி. பி. விஜயதுங்கா அஞ்சலி

(கொழும்பு)

ஊர்காவற்றுறையில் கொல்லப்பட்ட படையினரின் இல்லங்களுக்கு சென்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் டி. பி விஜயதுங்கா நேற்று அஞ்சலி செலுத்தினார். இச்சமபவத்தில் கொல்லப்பட்ட ஒவ்வொருவரது சடலங்களும அவர்களது இல்லத்திற்கு நேற்று கொண்டு செல்லப்பட்டது.

## கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை அதிகாரியான திரு. சுவன் நேற்று முன் தினம் கொழும்பு சென்றார் சகல மாவட்டங்களிலும் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கஅதிகாரிகளுக்கான கலந்துரையாடலுக்கே மேற்படி அதிகாரி சென்றதாக தெரியவருகின்றது. (75)

## வீரச்சாவு



லெப். ஆனந்தகுமார்

08 - 08 - 1992 அன்று வளலாய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

(4 ஆம் பககம் பார்க்க)

# குடா நாட்டில் இராணுவ நடவடிக்கை; முன்னேற்பாடுகள் பூர்த்தியாம்

(கொழும்பு)

யாழ். குடா நாட்டில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்றுள்ளதாகவும், இதற்காக பலாலி இராணுவ முகாமிற்கு உட்பட பகுதயில் சிவில் நிர்வாக இணைப்பு அதிகாரியாக முன்னாள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே. ஸி. லோகேஸ்வரன் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் நம்பகரமாகத் தெரியவருகிறது.

இது விடயமாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா லோகேஸ்வரனை கடந்த புதனன்று அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இராணுவ நடவடிக்கை நடைபெறும் காலத்தில் கூட்டுப் படைத்தளபதி, முப்படைகளினதும் தளபதிகள், உயர் இராணுவ அதிகாரிகள் பலாலியில் தங்கியிருப்பர் எனவும் அவர்கள் தினமும் தமக்கிடையே கூடி இராணுவ நடவடிக்கை பற்றி ஆராயும் கூட்டத்திற்கு சிவில் நிர்வாக அதிகாரியும் அழைக்கப்படுவார் என்றும் கூறப்பட்டுள்ளது.

## தாக்குதல் தாமதித்தால் ராணுவம் மனதிடமிழக்கும்

(கொழும்பு)

வடபகுதித் தாக்குதல்களைத் தாமதிக்கும் ஒவ்வொருதினமும் இராணுவத்தின் மனத்திடத்தைக் குறைப்பவையாக இருக்கும் என அரசியல் பார்வையாளர்கள் கூறியுள்ளனர்.

ஆனாலும் புதிய இராணுவ அதிகாரிகள் சகிதம் உடனடியாகத் தாக்குதல்களைத் தொடங்குவது கடினமே என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். அவர்கள் வடபகுதி நிலைமை பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என மேலும் தெரிவிககிறனர்.

## யுத்தத்தை உடன் ஆரம்பிக்க தமிழ் குழுக்கள் கோரிக்கை

பொதுஎதிரிகளுக்கெதிராகஇனியும் தாமதியாது யுத்ததை ஆரம்பிக்க வேண்டும் என கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் சிறிலங்கா அரசை வற்புறுத்திக் கேட்டுள்ளன

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிக்குப் பலியான சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகளின் மறைவையொட்டி கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் கூட்டாக விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அரசைக் கேட்டுள்ளனர்.

இதேவேளை பிரேமதாசா அரசாங்கமே விடுதலைப் புலிகளை வளர்த்தது. அதற்கான பலாபலன்களை அரசு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தனிநாடு அமைக்க அரசு அனுமதியாது

-பிரேமதாசா

(கொழும்பு)

நாட்டுக்குள் ஒரு தனிநாடு அமைக்க அரசாங்கம் ஒரு போதும் அனுமதிக்காது. பொதுவான புரிந்துணர்வின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவே அரசு விரும்புகிறது என்று மொறட்டுவ நகரில் நகர உதய திட்டத்தின் கீழ் பொது வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

ஊர்காவற்துறையில் கொல்லப்பட்ட படையினருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டத்தில் பிரேமதாசா மேலும் பேசுகையில், வடக்கு - கிழக்கு பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தளபதிகளின் மரணம் புலிகளுக்குப் பெருவெற்றி

- எ. எவ். பி செய்தியாளர்

(கொழும்பு)

ஊர்காவற்றுறை அராலிச் சந்தியில் நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் ஏற்பட்ட உயர் அதிகாரிகளின் உயிரிழப்பு சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சி அலைகளைத் தோற்றுவித்துள்ளன.

இதுபுலிகளுக்குபெருவெற்றி என அரசியல் விமர்சகர் குரூஸ் கூறியுள்ளார். இராணுவத்திற்கு எதிராக இவ்வளவு பெரிய வெற்றியைப் புலிகள் இதுவரை ஈட்டியதில்லை என எ.எவ்.பி செய்தியாளர் தெரிவித்தார்.

# இழப்புக்களை ஈடுசெய்ய தளபதிகள் இல்லையாம்

## இராணுவ அதிகாரி தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலில் சிக்கி உயிரிழந்த இராணுவ உயர் அதிகாரிகளின் இடத்தை நிரப்பக்கூடிய அதிகாரிகள் சிறிலங்கா இராணுவத்திற்குள் இல்லை என இராணுவ அதிகாரி ஒருவரைமேற்கோள் காட்டி பி. பி. சி நேற்றிரவு தெரிவித்தது. அவ்அதிகாரி இதுதொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்கொப்பேகடுவ, விஜயவிமலரெட்ன ஆகிய இரு அதிகாரிகளும் இல்லாத வடபகுதி யுத்தம் எப்படி இருக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் எனவும் இவ்விருவரும் அதிகாரிகள் வடபகுதிக்கான யுத்தத்தில் புதிய அனுபவங்களைப் பெற பல மாதங்கள் செல்லலாம். இவ் அதிகாரிகளின் இழப்பு வடபகுதிக்கான யுத்தத்தில் ஓர் எதிர்பாராத

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அடுத்த ஒலிம்பிக் அமெரிக்காவில்

யூலை 25 ஆம் திகதி தொடங்கி கடந்த பதினைந்து நாட்களாக ஸ்பெயினில் உள்ள பாசிலோனியாவில் நடைபெற்றுவந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நேற்றையதினம்முடிவடைந்தன.

இதில் 171 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆளுக்கொரு மரம் நடு
ஆயுள் நீள உறுதி எடு

## வரி விளம்பரம்

### 200 நாடகங்கள்

யாழ்ப்பாணம் பேச்சு வழக்குத் தமிழில் முதன் முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும்ஒரேயொரு மாணவனான 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். கெட்டிக்காரர்கள் 25/- முதலாம்பிள்ளை 30/- (2887)

### வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் உங்கள் மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் சகல மணிக்கூடுகளது பற்றிகளும் பெற்றுக்கொள்ளலாம். சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம் டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (2985)

### தாதி பயிலுனர்

தாதி பயிலுனர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு:- DR. P. சொர்ணலிங்கம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (2982)

### தவறிவிட்டது

கறுப்புநிற டயறிக்கவர் ஒரு தொகை, கோயில் செலவுக்குரிய பணத்துடன் 8-8-92 காலை அச்சுவேலிக்கும் சுந்தரோடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம் காவல் நிலையத்திலோ சி. இரத்தினசுவாமி, தலைவர் கலைமகள் சனசமூக நிலையம் அச்சுவேலி வடக்கு முகவரியிலோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (2989)

### கிரிக்கெட் அணி

(கொழும்பு)

அவுஸ்ரேலியா விலிருந்து கிரிக்கெட் அணி கொழும்பில் வந்திறங்கியுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நியூசிலாந்து அணி வந்தபோது அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குஅருகே ஒரு குண்டு வெடித்தது அன்று கிரிக்கெட் ஆட்டம் கைவிடப்பட்டது. அதன் பிறகு வெளிநாட்டு அணிகள் சிறிலங்கா பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

## தரம் 3 அதிபர்கள் பதவி உயர்த்தப்படுவர்

(கொழும்பு)

01-01-1985ம் திகதியிலோ அல்லது அதற்கு முன்னைய திகதியிலோ அதிபர் தரம் - 3 பதவியில் நியமிக்கப்பட்ட அனைத்து அதிபர்களும் 01-01-1992 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரக்கூடியதாக அதிபர் தரம்-2க்கு பதவியுயர்த்தப்படவிருக்கின்றனர் என கல்விச்சேவைச் சபையின் பிரதிப் பணிப்பாளர் திரு. பி. எஸ்.கமகே தம்மிடம் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

இதற்காகதமிழதிபர்கள் இருபதுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கான நேர்முகப்பரீட்சை ஆகஸ்ட் 25ஆம் திகதி பத்தரமுல்லையிலுள்ள கல்விச் சேவைச் சபையின் அலுவலகத்தில் நடைபெறும் எனவும் தெரிவித்த பொதுச்செயலாளர் அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார் நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்காவிட்டாலும், அவர்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய படிவத்தை இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமைப் பணிமனையில்பெற்று,அதைப் பூர்த்தி செய்து கோட்டக் கல்விப் பணிப்பாளரின் ஒப்பத்தைப்பெற்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாமெனவும் பொதுச்செயலாளர் தெரிவித்தார் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்ட அதிபர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ரி. அருளானந்தம், கட்டைக்காடு ஆர். சி. எஸ், முள்ளியான். திருமதி எஸ் ராசையா, ஜி ரி. எம். எஸ். கிரான். எஸ். சூசைப்பிள்ளை பாப்பாமோட்டை ஆர். சி ரி. எம். எஸ், திருக்கேதீஸ்வரம் ஜே. சூசைதாஸ், புனித இசதூர் ஆர். சி. ரி. எம். எஸ், ஏழாலை, திருமதி ஏ. கனகசபை, புங்குடுதீவு அரியநாயகம் புலம் ஜி ரி. எம். எஸ். பி. பிரான்சிஸ்சேவியர், அரிப்பு ஆர் சி ரி. எம் எஸ். வை. தாவீது, சிறிதோப்பு ஆர். சி ரி. எம். எஸ், போசாலை. ஏ. நித்தியானந்தராசா மாரடிகன்னாட்டி ஆர். சி. ரி. எம். எஸ், அடம்பன். எஸ். செபமாலை, கட்டியாண்டகுளம் ஆர். சி ரி. எம். எஸ், முருங்கன். என். தாமோதரம்பிள்ளை முக்காவில் ஜி. ரி. எம். எஸ், இயக்கச்சி. திருமதி பி. ஐயம்பிள்ளை காரைநகர் கிழக்கு ஏ. எம். ரி. எம். எஸ், திருபதி கே. ராஜா, முரசுமோட்டை ஜி ரி. எம். எஸ் எஸ். யோசப் மார்க், பாலைக்குளி ஆர். சி. ரி எம். எஸ், அடம்பன். கே. கோபாலன் நடேஸ்வரா வித்தியாலயம், காங்கேசன்துறை. எஸ். திருநாவுக்கரசு கலட்டி எம். எம். ரி. எம். எஸ், யாழ்ப்பாணம் என். சிவபாதசுந்தரம், புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம். கே. ஜெயபாலசிங்கம், கரணவாய் தெற்கு விநாயகர் வித்தியாலயம். ஆர். குழந்தைவேலு, முத்துவாகல தமிழ் வித்தியாலயம், கிரியெல்ல. கே. பூபாலசிங்கம் கோப்பாய் தெற்கு ஆர். சி. ரி. எம். எஸ். எஸ் விநாயகமூர்த்தி, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

## குறை காண்பதைவிட்டு ஒத்துழைப்பு தாருங்கள்

- விஜயபால மென்டிஸ்

(கொழும்பு)


இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வைக்கும் யோசனைகளில் என்னஓட்டைகள் இருக்கின்றன என கண்டுபிடிப்பதை நோக்கமாக கொள்ளாமல் நாட்டில் இன்று நிலவும் இந்தப் பாரிய இனப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வொன்றைக் காணுவதற்கு எதிர்க்கட்சிகள் உண்மையாக ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு மதவாச்சி செயலகப் பிரிவில் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மென்டிஸ் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இவ் இனப்பிரச்சினை காரணமாக நாடு பெருமளவு இரத்தத்தை சிந்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை எந்த விலை கொடுத்தாவது தடுத்து நிறுத்த வேண்டும். இரத்தம் சிந்த வைக்கும் இந்த இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முயற்சிக்கு எதிர்க்கட்சிகள் வழங்கியுள்ள ஒத்துழைப்பு என்ன? எனக் கேள்வி எழுப்பினார்

## வாரத்தில் மூன்றுநாள் திறக்கப்படும்

## கம்பியூட்டர் கல்வி




[] Basic
[] Pascal
[] dBase III+
[] Lotus 1-2-3
[] Word Star 5.5

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

**14-08-92 Week day**

**15-08-92 Week end**

மேலதிக விபரங்களுக்கு:

**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்**

37, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)

கிளைகள்:

வடமராட்சியில்: சகாபொண்ஸ், அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தென்மராட்சியில்; சயன்ஸ் சென்ரர், மடத்தடி, சாவகச்சேரி.

(சி 4866)

காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

வழக்கம்பரை - சுளிபுரம்

## விசேட பொதுக் கூட்டம்

## 16-08-92

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 16-08-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு பண்ணாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் மேற்படி சங்க தலைவர் திரு ச. சிவஞானம் (B. SC.) (*Dp in Ed.*) அவர்களின் தலைமையில் நடைபெறும். பொதுச்சபை பிரதிநிதிகள் தவறாது குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகம் கொடுத்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

7-8-92

க. நடராசா
செயலாளர்

குறிப்பு :-

பொதுச்சபை பிரதிநிதிகள் இடம்பெயர்ந்து இருப்பதால் அவர்களின் முகவரி அவர்களால் இதுவரை அறிவிக்கத் தவறியுள்ளவர்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலை வழக்கம்பரையில் உள்ள சங்க தலைமைக் காரியாலயத்தில் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே எம்மிடம் தொடர்பு கொண்டு விலாசம் தந்தவர்களுக்கு நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

(சி/4860)

மக்கள் வங்கியின்

## மஸ்கெலியா கிளையில் 8 இலட்சம் ரூபா மோசடி

(மஸ்கெலியா)


மஸ்கெலியா மக்கள் வங்கிக் கிளையில் வைப்பிலிடப்பட்ட 7 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதிமோசடியைத் தொடர்ந்து அவ் வங்கியில் கடமையாற்றிய காசாளர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

இத் தகவலை மஸ்கெலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித்தர்மசேன தெரிவித்தார்.

மஸ்கெலியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணம் கடந்த ஆறுமாத காலத்திற்கு முன்னர் மேற்படி வங்கிக் கிளையில் வைப்பிலிடப்பட்டது இதற்கான அத்தாட்சியாக வங்கி பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டது.

ஆனால் இந்தப் பணம் வங்கிப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லையாம் இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்ட போதே இப் பணக் கையாடல் மோசடி தெரிய வந்ததாகவும் இதனைத் தொடர்ந்தே காசாளர் தலைமறைவாகியதாகவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## 31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தாய் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 06 |  | 10 |
| — | | — |
| 0? | | 07 |
| — | | — |
| 1975 | | 1992 |

**2-ம்லெப். இந்திரன்** (சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவு)

[மயில்வாகனம் சந்திரன்]

10 - 07 - 92 அன்று வளலாயில் இடம்பெற்ற நேரடிமோதலின்போது வீரச்சாவடைந்தவர்.

தன்மானம் பெரிதென்று தமிழ்மானம் காத்திடவே
புறப்பட்ட வேங்கை புலிப்படையில் சேர்ந்தவன்.
துடிக்கின்ற கரங்களில் துப்பாக்கி ஏந்தியே
துட்டர்தம் கொட்டமதை அடக்கியே
விடுதலை வேட்கையுடன் வீறுநடை போட்டவன்
என்றும்போல் அன்றும் புறப்படுகின்றான் போர்க்களம்
வளலாய் என்றொரு ஊராம், அது தமிழன் வாழ்ந்த இடமாம்

தீரமுடன் போராடியே வீரமரணம் அடைந்தவனே
இறுதியாகப் பெற்றெடுத்த என் அன்பு இளையவனே
உன் நினைவலைகள் எம் மனக் கண்ணில்
நாளை வருவேன் என்று சொன்னாயே தம்பி
நீ வந்தாய் தம்பி இந்நாட்டின் வித்தாய் தம்பி
நீ கண்ட கனவுகள் நனவாகப் போகிறது.

முள்ளிய வீதி, அரியாலை.

(2949)

உன் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

நினைவு கூருகின்றோம்.

வெடித்தது அன்று கிரிக்கெட் ஆட்டம் கைவிடப்பட்டது. அதன் பிறகு வெளிநாட்டு அணிகள் சிறிலங்கா பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

இப்போது ஐந்து ஆண்டுகளுக்கு பின் அவுஸ்ரேலிய அணி வந்துள்ளது.

## தென்னையில் கருவண்டு

தற்போது பல பகுதிகளிலும் தென்னை மரங்களுக்கு சேதத்தினை உண்டாக்கும் கருவண்டின் தாக்கம் பெருமளவில் அவதானிக்கப்படுகிறது எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. அக்குறிப்பில் மேலும் இக் கருவண்டுத் தாக்கத்தினால், தென்னம் நாற்றுகள், இளம் தென்னம் பிள்ளைகள் உட்பட, முதிர்ந்த தென்னை மரங்களும் பாதிப்படைந்து வருகின்றன. தென்னை மரக் குருத்தின்அடிப்பாகத்திலுள்ள மென்மையான பகுதிகளை இவ்வண்டுகள் தாக்குவதனால் தென்னை மரங்கள் பட்டுப் போகும் ஆபத்து ஏற்படுகின்றது. கருவண்டின்தாக்கம் ஏற்பட்டிருந்தால், தென்னம் ஓலைகளில் கத்தரிக்கோலால் வெட்டியது போன்ற அடையாளங்கள் இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கருவண்டுத் தாக்கம் பரவலாகக் காணப்படின் 10 மி.லீ. மொனோ குறோட்ட போஸ் மருந்தை 500 மி லீ. தண்ணீருடன் (அதாவது 3/4 போத்தல் நீருடன்) கலந்து, அக்கலவையை ஒரு முதிர் மரத்துக்கு கைத்தெளிகருவிமூலம் தெளிக்கவும் இளம்தென்னம்பிள்ளையாயின், 5மி.லீ. மருந்தை 500 மி.லீ. தண்ணீருடன் கலந்து குருத்துப்பாகம் நன்கு நனையும் படி வாரத்தில் இருமுறை தெளிக்க வேண்டும். மேலும் தென்னம் தோட்டங்களை துப்புரவாக வைத்திருப்பதன் மூலமும் இவ் வண்டுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாயப் பிரிவு ஆலோசனை கூறுகின்றது.

பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மென்டிஸ் தெரிவித்

## ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை

(வேலணை)

கல்வித் திணைக்களத்தினரால் ஆங்கிலம் கற்பிப்பதற்காக ஆசிரியர்களை தெரிவு செய்வதற்காக விண்ணப்பிக்குமாறு கோரிய விண்ணப்பத்தின் பேரில் விண்ணப்பித்த ஆசிரியர்களுக்காக பரீட்சை எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றது.

இப்பரீட்சையில் தோற்றுவதற்கென ஐயாயிரம் பேர்கள் வரை விண்ணப்பித்துள்ளதாகவும் யாழ் கல்வித் திணைக்களகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளன (14)

## வாரத்தில் மூன்றுநாள் திறக்கப்படும்

(குருநகர்)

வாரத்தில் மூன்று தினங்களுக்கு மட்டுமே இறைச்சி வியாபாரம் நடைபெறுமென யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சமாசம் அறிவித்துள்ளது.

இதன்படி புதன்- சனி- ஞாயிறு ஆகிய தினங்களில் மட்டுமே யாழ். மாவட்டத்தில் இறைச்சிக்கடைகள் திறந்திருக்கும்

கடந்த (7 8 92) வெள்ளிக்கிழமை சமாசத்தலைவர் திரு மு சிவானந்தராசா தலைமையில் கூடிய இறைச்சிக்கடை வியாபாரிகள் கால்நடைகளை கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக இம்முடிவை எடுத்துள்ளனரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (21)

## உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை யாழ் செயலகம் கட்டுப்பாட்டு விலையில் கொள்வனவுசெய்து அவற்றை பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவு முறைக்கு விநியோகம் செய்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது இந் நடைமுறை மிகவிரைவில் செயற்படுத்தப்படும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

## என்றென்றும் புகளோடு வாழி! வாழி!!

வென்றுவிட்டான் எல்லாளன் என்ற சேதி
இன்றெமது காதுகளில் வந்து மோதி
பொன்றாத புகழதனைத் தந்ததோடு
குன்றாக நிமிர்ந்ததடா தமிழர் நாடு

சண்டாளர் எமையழிக்கச் சூழ்ச்சி செய்தார்
துண்டாடித் தமிழர்களைத் தெருவிற் போட்டார்
கொன்றொழித்தாய் பகைதன்னைக் கரிகாலன் நீ
என்றென்றும் புகழோடு வாழி! வாழி!!

செ. தமிழேந்தி


லாளரிடம் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே எம்மிடம் தொடர்பு கொண்டு விலாசம் தந்தவர்களுக்கு நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

(சி/4860)

## ஈராண்டு இதய அஞ்சலிகள்

''தன்னைக் கொடுத்திவன் விண்ணில் கலந்தனன்-கோட்டை மண்ணில் புலிக்கொடி வண்ணம் மிளிரவே''



தாயின் மடியில்
உருவாக

28 - 01 - 1976

கோட்டை மடியில்
உரமாக

05 - 08 - 1990

## வீரவேங்கை சந்துரு

[ இராசையா திருமாறன் ]

எம் மாறனே .....
கோட்டை மண்ணில்
கொடி உயர்ந்திட
வீட்டை மறந்து
விரைந்து ஓடினாய் ..
நீ 'சந்துரு' ஆகிச்
சாதனை படைத்து
நெஞ்சங்களில் நிறைந்து
ஈராண்டு செல்கிறது
இதயங்கள் சிலிர்க்கிறது.
காலம் ஒன்று கைகூடும்
உன் கனவுகளும் அன்று நிறைவேறும்

05 - 08 - 90 அன்று யாழ் கோட்டையில் இவருடன் வீரச்சாவு எய்திய ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்,

மண்டான்,
கரணவாய்மேற்கு, கரவெட்டி (சி/4864)

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

(2949) குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம் . .
## 1992 - 08 - 10

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை, திரியாய்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ராஜா** (மாணிக்கம் நடராஜா - உலந்தாவ, அக்குரச)

1987ஆம் ஆண்டு திருக்கோணமலையில், தேசவிரோதசக்திகளினால் அடித்துக்கொலை செய்யப்பட்ட -

**செல்வம்** (காளிதாசன் செல்வக்குமார் - திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு கோண்டாவிலில் தேசவிரோத சக்திகளால் பிடித்துச் செல்லப்பட்டு பின்னர், சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்.

1990ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எம்மைப் பிரிந்த -

**ஸ்வரகுமார்** (யோகநாதன்-பழுகாமம், மட்டக்களப்பு)

ஆனையிறவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சவெய்திய -

**சுரேஸ்** (சோமசுந்தரம் பரமேஸ்வரன் - முட்டுச்சேனை, வெருகல், மூதூர், திருக்கோணமலை)

மட்டக்களப்பு - வாழைச்சேனை இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

திருக்கோணமலை - பச்சனூர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 11 தமிழர்கள்.

வவுனியாவில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 16 தமிழ் இளைஞர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**திலகன்** (திருச்செல்வம் கஜேந்திரன் - புதியகுடியிருப்பு, பாஷையூர், யாழ்ப்பாணம்)

இதேபகுதியில் நிகழ்ந்த இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**நடேஷ்/நடேசன்** (தங்கையா திருச்செல்வம் - பசுமின் வீதி, 3-ம்வாய்க்கால், பரந்தன், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில், அதனுடன் இணைந்து செயல்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4855]

## சிந்தனைக்கு

நிகழ் காலத்தை அறியகடந்தகாலத்தை நீ அறிந்திருக்க வேண்டும். ஒப்புநோக்குதான் அறிவின் மூலம்.

- மாக்ஸிம் கோர்க்கி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2303
த. பெ. எண் - 05

# 1983இல் ஆரம்பித்தது ஓயவில்லை

**1983**ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் ஆரம்பித்த கண்ணிவெடித் தாக்குதல் இன்று வரை இலங்கை அரசியலையும், சிங்கள இராணுவத்தையும் ஒரு உலுப்பு உலுப்பி வருகின்றது. 1983-ம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி திருநெல்வேலியில் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதல் இலங்கை அரசியலையே ஒரு உலுப்பு உலுப்பியதென்றால், நேற்று முன்தினம் அராலியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித்தாக்குதல் சிங்கள இராணுவத்தின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்ததெனலாம்.

அராலிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரிகள் ஈழப்போரில் சிங்களத் தரப்பிற்காகப் பெரும் பங்காற்றியவர்கள். இவர்கள் சிங்கள அரசாங்கத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கியவர்கள். இத்தாக்குதலில் பலியான மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ சிங்களவர்களினால் துட்டகைமுனு எனப் போற்றப் பட்டவர். இவர்களின் இழப்பு இராணுவத் தரப்பிற்குப் பேரிழப்பு என்பதில் எவரும் சந்தேகம் கொள்வதாக இல்லை. இது சிறிலங்காவைப் பொறுத்து ஒரு தேசிய இழப்பாகவே கருதப்படக் கூடியதாகும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் விசேடவேவுப் படைப் பிரிவினர், மேற்கொண்ட இத்தாக்குதல் அவர்களின் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். அதேவேளை, சிங்கள இராணுவத்தின் எதிர் காலத் திட்டத்திற்கு விழுந்த பலத்த அடியாகும். விடுதலைப் புலிகளின் போர் யுத்திகள், துணிவு என்பன கடந்த காலத்தில் எதிரிகளாலேயே பாராட்டப்பட்டவையாகும். விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்திய இராணுவத் தளபதிகளும் சரி, சிறிலங்கா படைத் தளபதிகளும் சரி,

# உலகில் தனி வல்லரசாகத் திகழ கீழ்த்தரமாகச் செயற்படும் அமெரிக்கா

## நியூஸ்வீக் விசனம்

உலகம் முழுவதும் தனி வல்லரசாக விளங்குவது தாங்க முடியாத தொல்லைகளைத் தரும் ஒரு விடயமாகும். சோவியத் ஒன்றியத்துடன் கெடுபிடி யுத்தத்திலும், ஈராக்கியத் தலைவர் திரு. சதாம்ஹுசைன் அவர்களுடன் பேரச்சம் தரும் போரிலும் ஈடுபட்டு வெற்றி வாகை சூடிய அமெரிக்காவின் நிலை சந்தோஷப்படக் கூடிய ஒன்றாக இல்லை, ஓர் ஆண்டுக்கு முன் சர்வதேச அரங்கில் அமெரிக்கா பெரும் மதிப்பைப் பெற்றிருந்தது. சோவியத் பேரரசின் வீழ்ச்சி, அமெரிக்காவின் முதலாளித்துவ கொள்கைக்கு எதிராகவிருந்த கம்யூனிச சித்தாந்தத்தின் முடிவுக்கு வித்திட்டது. வேறு ஒரு நாட்டைக் கைப்பற்ற முயன்ற கொடுங்கோல் ஆட்சியாளரும், தற்பெருமை கொண்டவருமாகிய ஒருவரை அடிபணியச் செய்ய ஐ. நா. உறுப்பு நாடுகள் பலவற்றின் ஆதரவுடன் அமெரிக்க இராணுவம் நடவடிக்கையை மேற்கொண்டது. புதிய உலக ஒழுங்கு ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற அமெரிக்காவின் நோக்கத்திற்கு இந்த நாடுகள் தங்கள் ஆதரவை கொடுத்தனவா என்று கேட்டால் அவை இதில் ஒருவித அக்கறையும் கொள்ளவில்லை என்றே கூறலாம்.

மற்றவர்களுக்கு தடுமாற்றத்தைக் கொடுக்கக் கூடிய அதனுடைய நடவடிக்கைகள் காரணமாக அகில உலகினதும் தலைமைத்துவம் தன்வசமே இருக்கின்றது எனக்கோரும் உரிமையை அண்மைக்காலமாக அமெரிக்கா இழந்து வருகின்றது. மற்றைய வல்லரசுகளின் எழுச்சியைத்தடுப்பதன் மூலம் எப்படி அமெரிக்கா தன் ஆதிக்க நிலையைப் பேணமுடியும் என தற்செயலாக வெளிவந்த அமெரிக்க இராணுவத் தலைமைப்பீடத்தின் (பென்ரகன்) இரகசிய ஆவணங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. இதைக் கண்டு அவமானமடைந்த அமெரிக்க அரச மேலாளர்கள் இதை மறுத்துள்ளார்கள். திரு. சதாம் அவர்களை விட ஈரானே அச்சம் தரக்கூடியது என கருதியதால் ஈரானுக்கு எதிராக அரணாக விளங்குவார் என்ற தவறான கணிப்பின் காரணமாக, பிராந்தியத்தில் மேலாதிக்கம் பெற திரு. சதாம் அவர்கள்மேற்கொண்ட முயற்சிக்கு அமெரிக்கா ஊக்கமளித்ததாக பின் வெளிவந்த செய்திகள்தெரிவித்தன. கடன் அடிப்படையில் ஈராக் ஆயுதக் கொள்வனவு செய்ய அமெரிக்கா உத்தரவாதம் அளித்ததாகவும் அறியமுடிகின்றது. இன்று அமெரிக்காவும் வளைகுடா போருக்கு முன் ஈராக்கிற்கு ஆயுத வழங்களை மேற்கொண்ட அதன் சகாக்களான பிரித்தானியாவும், பிரான்சும் பதவியிலிருக்கும் திரு. சதாம் அவர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதை விடுத்து ஈராக்கிய மக்களை இன்னலுக்கு உள்ளாக்கத்தக்க கடுமையான தடைகளை ஈராக்கிற்கு எதிராகக் கொண்டு வரவேண்டுமென்று தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றன. அவரின் ஆட்சியின் கீழ் துன்பப்படும் மக்களை விட குறைந்தளவு பாதிப்பையே ஈராக்கிய இரும்பு மனிதரான திரு. சதாம் சந்திக்கக்கூடிய ஒரு தாக்குதலை இரகசியமாக நடாத்த இப்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெருந்தொகையான போலி நாணயத்தை ஈராக்கிற்குள் பரவ விடுவதன் மூலம் அதன் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க அமெரிக்கா முயல்வதாக அங்குள்ள செய்தித்தாள்கள் கூறுகின்றன.

இப்படியான நடவடிக்கை சட்ட விரோதமானதும் ஒரு நாட்டின் இறைமையை மீறுவதாகவும் இருக்கும் இப்படியான கீழ்த்தரமான வழிமுறைகளைப் பெரிய நாடுகள் கையாளும் போது இது சர்வதேச உறவுகளை இழிவுபடுத்துவதாக இருக்கும்.

பான்ஆம் வான்சேவை (*Pan Am Flight*) யைச்சேர்ந்தஅமெரிக்க வானூர்தி ஒன்றை 1988 ஆம் ஆண்டில் இரண்டு லிபிய நாட்டவர்கள் குண்டு வைத்துத் தகர்த்தார்கள் எனக் குற்றம் சுமத்தி அவர்களைத் தன்னிடம்ஒப்படைக்கும்படி அமெரிக்கா லிபியாவுக்கு நெருக்குதலைக் கொடுத்து வருகின்றது இந்த விடயம் பற்றி விசாரணைகளை மேற்கொண்ட அமெரிக்கர்களே உண்மையில் லிபியா குற்றம் புரிந்துள்ளதா என்பதில் சந்தேக முறுகின்றனர். குற்றம் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் இரண்டு லிபியர்களையும் உலக நீதிமன்றம் விசாரிப்பதற்கு அமெரிக்கா ஒப்புதல் வழங்க மறுக்கிறது திரு. றொட்னி கிங் போன்ற தன் சொந்த நாட்டுக் கறுப்பினக் குடிமக்களுக்கு நீதிவழங்குவதனை உறுதிப்படுத்த முடியாதிருக்கும் அமெரிக்க நீதிமன்றத்தால் எப்படி இந்த இரண்டு லிபியர்களுக்கும் நீதி வழங்க முடியுமென கேட்பதன் மூலம் லிபியர்கள் தங்கள் விவாதத்திற்கு வலுச் சேர்த்து வருகின்றார்கள். தங்கள் பிரதேசத்தில் ஆள் நெருக்கடியுள்ள அகதிகள் முகாம்களில் இருந்து பொருளாதார நோக்குடன் அங்கு சென்ற வியட்நாமிய இடம் பெயர்ந்தோரை அவர்களுடைய நாட்டுக்கு அனுப்புவதை வெறுமனே அமெரிக்கா பார்த்துக் கொண்டிருப்பது ஹொங் ஹொங்கில் வாழ்வோருக்கு கவலையைத் தருவதாக இருக்கின்றது. இருப்பினும் தங்கள் நாட்டில் நிலவும் கொடுங்கோல் ஆட்சிக்குப் பயந்து படகில் அமெரிக்காவுக்குச் சென்ற கெயிற்றிய மக்களை அவர்களுடைய நாட்டுக்கு விரைவாக அனுப்புவதையிட்டு அமெரிக்கா ஒருவித மனிதாபிமானத்தையும் அன்பையும் காட்டவில்லை. போட்ஔவ் பிறின்சில் நிலவும் இரக்க மற்ற கொடூரமான ஆட்சிக்குஎதிராக அமெரிக்கா விதிக்கும் தடைகளால் ஏற்பட்ட தாக்கம் காரணமாகவும் கெயிற்றிய மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றார்கள். எழுச்சியூட்டுகின்ற தலைமைத்துவத்துக்கு உதாரணமாக விளங்குவதே உலகத்துக்கு தேவைப்படுகிறது.

### பாகிஸ்தான் வாங்கிய

# எவ்-16 ரக விமானங்களை தர அமெரிக்கா தடை விதிப்பு

(வாஷிங்டன்)

பதினொரு எவ்—பதினாறு ரகப் போர் விமானங்களை தன்னிடம் ஒப்படைக்குமாறு பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்துவிட்டது. பாகிஸ்தான் பணம் கொடுத்து வாங்கிய இந்த விமானங்களை இவற்றின் தயாரிப்பாளர்கள் அமெரிக்க அரசிடம் ஒப்படைத்து விட்டனர்.

பிரஸ்லர் திருத்தச் சட்டத்தின் கீழ் பாகிஸ் தானுக்கு இராணுவ உதவி நிறுத்தி வைக்கட்பட்டுள்ளதால் இந்த போர்விமானங்கள் தருவதற்கு இல்லை என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடுவதாகவும் அதனால் பாகிஸ்தானிலுள்ள அணுசக்தி ஆலைகளை சர்வதேச அணுசக்தி ஏஜென்சி பார்வையிட வேண்டுமெனவும் அமெரிக்கா வலியுறுத்தி வருவது தெரிந்ததே. அதுபற்றி

### பங்குச் சந்தை ஊழல்

# மேலும் இருவர் கைது; தடுத்து வைக்க உத்தரவு

(டில்லி)

மிகப்பெரும் பங்குச் சந்தை ஊழல் விவகாரத்துடன் தொடர்புபட்ட ஊழல் குற்றங்களுக்காக இந்தியாவின் திட்டக்கமிஷனின் முன்னாள் உறுப்பினரும் அவரது மகனும் பொலிசாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட இவ் இருவரும்டில்லியில்ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பதின்னான்காம் திகதிவரை பொலிஸ்

# செம்பை நாராயணன் காலமானார்

# திட்டமிட்டவாறு அகதிகள் இலங்கை வரமாட்டார்கள்

(கொழும்பு)

தமிழ் நாட்டிலிருந்து இந்த வாரம் எட்டுத் தொகுதித் தமிழ் அகதிகள் நாடு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் சில நடைமுறைப் பிரச்சினைகளால் இரண்டு விமானங்களே திருக்கோணமலை வந்தன.

அகதிகளில் பலர் பெண்களும், குழந்தைகளும் என தெரிவிக்கப்படுகிறது. வயோதிபர்களும் ஊன்று தடிகளோடு வந்திருக்கிறார்கள்.

தற்காலிக முகாம்களில் வைத்து வந்திறங்கிய அகதிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

# குருநகரில் நுளம்பு தொல்லை அண்மையில் அதிகரிப்பு

(குருநகர்)

நுளம்பு அதிகரிப்பால் குருநகர் வாழ் மக்கள் பெரும் தொல்லைகளிற்கு ஆளாக நேர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடிகால்களை துப்புரவு செய்வதில் ஏற்படும் தாமதங்களால் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் பரவவும் காரணமாக விளங்குகின்றன.

வடிகால்களுக்கு நுளம்புகளை அகற்றும் மருந்து தெளிப்பதும் நிறுத்தப்பட்டிருப்பதால் நுளம்புகள் பெருகி மக்களைத் துன்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (21)

# வசதியற்றோருக்கு இலவச

விடுதலைப் புலிகளின் போர் யுத்திகள், துணிவு என்பன கடந்த காலத்தில் எதிரிகளாலேயே பாராட்டப்பட்டவையாகும். விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்திய இராணுவத் தளபதிகளும் சரி, சிறிலங்கா படைத் தளபதிகளும் சரி, காலத்திற்கு காலம் புலிகளின் சிறப்புப்பற்றி பிரஸ்தாபித்துள்ளனர். புலிகளின் யுத்த தந்திரோபாயங்கள் இராணுவ நூல்கள் எதிலும் காணப்படவில்லைஎன்கிறார் ஓர்சிறிலங்கா இராணுவ அதிகாரி

இதேவேளை, இத்தாக்குதல் யாழ். குடாநாட்டின் மீது படை எடுத்தல், கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல், என்ற இராணுவத்தினரின்எதிர்காலத்திட்டத்திற்குப் பலமான முன்னெச்சரிக்கையும் ஆகும். வடபகுதியில் முக்கிய பொறுப்புக்களை வகித்த ஆயுதப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டமை யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதலை பாதிக்கப்போவதில்லை எனக்கூறிக் கொண்டலும்பரந்த பிராந்தியத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் என்பதும், அதனைப்பாதுகாப்பது என்பதும் முடியாதது என்பதனை சிங்கள இராணுவத்தினருக்கு இத்தாக்குதல் உணர்த்தியிருக்கும். அதாவது எந்தப் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும் புலிகளால் ஊடுருவமுடியும், தாக்குதல் நடத்த முடியும் என்பதை இத்தாக்குதல் தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளது

இதன்மூலம்சிறிலங்கா எண்ணுவது போல்இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒருபிரதேசத்தில் எவ்வளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பினும் இது தமிழர் தாயகம் என்பதுஇத்தாக்குதலால் நிருபிக்கப்பட்டுள்ளது. தாய் தனதுபிள்ளைகளுக்குஎப்பொழுதும் மறைவிடத்தைக் கொண்டுள்ளாள் என்பதை இது வெளிப்படுத்தியுள்ளது.

இப் படிப்பினைகளைக் கருத்திற் கொள்ளாது சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தொடர்ந்தும் இராணுவத்தீர்வு குறித்தே சிந்திக்குமானால் அதற்காகப் பெரும் சுமைகளை சிறிலங்கா அரசாங்கம் சுமக்க வேண்டி வரும். பல துட்டகைமுனுக்களை இழக்க வேண்டியும் வரும் புலிகளிடம் சிறிலங்கா இராணுவம் பட்டபடிப்பினையே போதுமானது இந்நிலையில் குடா நாட்டைப்பிடிப்பதோ, அன்றி யாழ். நகரைக் கைப்பற்ற முற்படுவதோ இனப்பிரச்சினையைத்தீர்த்துவைத்துவிடப் போவதில்லை. மாறாக இராணுவத்தீர்வை நாடி அகலக்கால் வைத்தால் அதன் விளைவுகளை அரசாங்கம் அனுபவித்தே ஆகவேண்டும்.

## செம்பை நாராயணன் காலமானார்

(சென்னை)

பிரபல கர்நாடக இசைப் பாடகரான செம்பை நாராயணன் நேற்று சென்னையில் காலமானார். எழுபது வயதான அவர் கடந்த சில நாட்களாக நோயுற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் செம்பை வைத்தியநாத பாகவதரின் மாணவர் ஆவார்.

### சந்தனக்கடடை கடத்தல்

(சென்னை)

மதுராந்தம்அருகே சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த கார் ஒன்றை தமிழகப் பொலிசார் வழிமறித்து சோதனையிட்டபோது ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியுடைய முந்நூறு கிலோகிராம் எடையுள்ள சந்தனக்கட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காரில் இருந்த மூவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிசாரின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட இவ் இருவரும்டில்லியில்ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பதின்னான்காம் திகதிவரை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். திட்டக்கமிஷன் முன்னாள் உறுப்பினரான கிருஷ்ண மூர்த்தியும், அவரது மகள் சந்திராவும் விசேட புலனாய்வு பிரிவு பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அணுசக்தி ஆலைகளை சர்வதேச அணுசக்தி ஏஜென்சி பார்வையிட வேண்டுமெனவும் அமெரிக்கா வலியுறுத்தி வருவது தெரிந்ததே. அதுபற்றி அமெரிக்கக் காங்கிரஸ் செனட்டரான பிரஸ்லர் செய்துள்ள சிபாரிசுகளின் அடிப்படையில் பாகிஸ்தானுக்கான இராணுவ ரீதியான தளபாடங்கள் மற்றும் பொருள்களை விற்பதற்கு அமெரிக்கா தடைவிதித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அட்லாண்டா விண்கலம் பத்திரமாக தரையிறங்கியது

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் அட்லாண்டா என்னும் விண்கலம் அதன் முக்கிய பணியை நிறைவேற்றாமலேயே நேற்று முன் தினம் புளோரிடாவிலுள்ள கென்னடி விண்வெளி மையத்தில் பத்திரமாக தரையிறங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் செயற்கைக் கோள் ஒன்றை இருபது கிலோ மீற்றர் நீளமுள்ள மின்சாரக் கேபிள் மூலமாக இழுத்து வரும் முக்கிய குறிக்கோளை நிறைவேற்ற அட்லாண்டா விண்கலம் தவறிவிட்டது. எனினும் எண்பது கோடி டாலர் செலவிலான இவ் விண்கலத்தின் பயணம் வெற்றிகரமாக நிறைவேறியதாக நாசா விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

### துருக்கியில் குண்டு வெடிப்பு

(இஸ்தான்புல்)

துருக்கியின் துணியாலைஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் முப்பத்தியிரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்து உள்ளனர்.

### பொன்விழா

(டில்லி)

'வெள்ளையனேவெளியேறு' என்ற முழக்கத்துடன் இந்திய சுதந்திரப்போராட்டம் வீறு பெற்ற நாளின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் நேற்று உத்தியோக பூர்வமாகஆரம்பமாகியது .

**அயோத்தியா விவகாரம்**

## உயர்மட்டக்குழு புறப்படுவது ஒருவாரம் தாமதமாகியது

(டில்லி)

இந்திய உயர்நீதிமன்றத்தின்பதிவாளர் ராய் தலைமையிலான உயர்மட்டக் கமிட்டி அயோத்தியா செல்வது ஒரு வாரத்திற்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது. சர்ச்சைக்கு உட்பட்டதான பகுதியில் கட்டப்பட்ட சீமெந்து மேடைகள் பற்றி ஆராய்ந்து உயர்நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதே இக் குழுவின் விஜயத்திற்கான நோக்கமாகும். உத்தரப் பிரதேச அரசு இந்த மேடையைக் கட்டியதன் மூலம் நீதிமன்ற உத்தரவுகளை மீறிவிட்டதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வ(ழக்)கு(க)ளை(ய) இந்த உயர் மட்ட கமிட்டியை நீதிமன்றம் நியமித்தது. இக் குழுவினர் எதிர்வரும் பதினைந்தாம் திகதி அயோத்தியா செல்லலாம் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது.

## வனக்காவலருக்கு ஆயுதம் தமிழகம் 13லட். ரூபா ஒதுக்கு

(சென்னை)

தமிழ் நட்டில் இருக்கும் காடுகளைப் பாதுகாக்கும் வனப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஆயுதமும், வெடி மருந்துகளும் வாங்குவதற்காக தமிழக அரசு பதின்மூன்று லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் சென்னையில் தெரிவித்தார். செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், வனத்துறை அதிகாரிகளுக்கு வயர்லெஸ் கருவிகள் வழங்குவதற்காக மேலும் பதினேழு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வடிகால்களை துப்புரவு செய்வதில் ஏற்படும் தாமதங்களால் கழிவு நீர் தேங்கி துர்ருப்பதால் நுளம்புகள் பெருகி மக்களைத் துன்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (21)

## வசதியற்றோருக்கு இலவச வைத்திய ஆலோசனை

வசதி குறைந்தவர்களுக்கான இலவச வைத்தியசேவை நடத்தும், நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் அச் சேவையின் ஒருபகுதியாக இலவச வைத்திய ஆலோசனை, மற்றும் பரிசோதனைகளை நடத்தவுள்ளனர். இலவசமாக நடைபெறும் இச் சேவையில் அண்மையில் அமெரிக்காவிலிருந்து திரும்பிய வைத்திய கலாநிதி க.சிவநேசன் கலந்து கொள்கிறார். இச் சேவையின் கீழ் வைத்திய ஆலோசனை பெற விரும்புவோர் தங்கள் பெயர் விபரங்களை எதிர்வரும் இருபதாம் திகதிக்கு முன்பாக 374, பருத்தித்துறை வீதி நல்லூர் என்னும் முகவரியில் பதிவு செய்யவேண்டும்.

**அகதிகட்கான ஐ.நா.தூதுவராலயம்-இந்தியா**

## உடன்பாடு குறித்து பிரட்மன் விளக்கம்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் விடயம் தொடர்பாக இந்திய அரசுக்கும் அகதிகளுக்கான ஐ நா. தூதுவராலயத்திற்கும் இடையில் இணக்கப்பாடு குறித்து கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

மேற்படி இணக்கப்பாட்டில் ஐந்து அம்சங்கள் இருப்பதாக கூறி அந்த அம்சங்களை எடுத்துரைத்தார்.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளின் பட்டியலையும் சுயமாகத் திரும்பிச்செல்ல விரும்பியோரின் விண்ணப்பப் பத்திரங்களையும் இந்தியா அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயத்துக்கு வழங்கும். திரும்பிச் செல்ல விரும்புவோர் பட்டியலை ஐ நா. தூதுவராலயம் மாதிரி பரிசிலனையை நடாத்தும் இந்நடவடிக்கைக்காக தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் இருப்பிடங்கள் இனம் காணப்படும் இலங்கை அகதிகள் திரும்பிச் செல்ல விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்களது நிலையை இந்தியா பரிசீலனை செய்யும். இலங்கை திரும்பும் அகதிகளுக்கான உதவிகள் ஐ நா. தூதுவராலயத்தின் நடவடிக்கைகள் ஆகியவை சம்பந்தப்பட்ட தகவல்களை அகதிகளுக்குவிளக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் பிரட்மன் விளக்கமளித்தார்.

## வவுனியா காவலரண்களில் பாது. பலப்படுத்தப்படுகிறது

(கொழும்பு)

வவுனியா வடக்குப் பகுதியில் இராணுவக் காவல் அரண்களை புலிகள் தாக்கக்கூடும் என்று கருதப்படுவதால் பாதுகாப்பு படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர் எனத் (;ıυ((ிரத இதேவேஎள வவுனியா வடக்கேயுள்ள எல்லைப்பகுதியில் இருக்கும் படையினர் நிலைகள் அனைத்தும் உஷார்படுத்தப்படுவதாக கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

பாதுகாப்பு - அத்தியாவசிய சேவைகள்

# அதிகாரிகளுக்கிடையில் முரண்பாடு; வடபகுதி அத்தியாவசியசேவைபாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் அரச உயரதிகாரிகளிடையே ஏற்படும் கருத்து மோதல்களினால் வடபகுதிக்குத் தேவையான பல அத்தியாவசிய சேவைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் பகுதியின் உயர் அதிகாரிகளிற்கும், கூட்டுப்படைகளின் தலைமை அலுவலக உயர் அதிகாரிகளிற்குமிடையிலேயே கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றது. வடபகுதியில் குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய சேவைகள் குறித்தே இருதரப்பினருக்குமிடையில் கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

மேற்படி பகுதி மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகள் குறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாவரினால் மேற்கொள்ளப்படும் முடிவுகள் எதையும் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலக அதிகாரிகள் அனுசரிப்பதில்லை. பெரும்பாலும் மேற்படி முடிவுக்கு முரணாகவே செயற்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இவ்வாறான நிலைமையினால் வடபகுதிக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அனுப்பி வைப்பதற்காக மேலதிகமாக இரு கப்பல்களை உடனடியாக சேவையில் அமர்த்துவது என்றும், குடாநாட்டு மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் குறைந்த பட்ச அளவான மண்ணெண்ணையை விநியோகிப்பதற்குத் தேவையான சுமார் ஆயிரம் பீப்பா மண்ணெண்ணையை அனுப்பி வைப்பது என்றும் அத்தியாவசிய சேவைகள் பகுதியினர் தீர்மானித்தனர். இம்முடிவுகளுக்கு கூட்டுப்படைகளின் அளித்த போதிலும் நடைமுறைக்கு கொண்டுவரும் சமயம் மேற்படி நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளதாக கொழும்பில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

தற்போது ஒரு கப்பலை மட்டுமே இம்மாதம் நடுப்பகுயில் பருததித்துறைக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது அத்துடன் ஆயிரம் பீப்பா மண்ணெண்ணைக்குப் பதிலாக மிகக் குறைந்த எண்ணிக்கையான பீப்பா மண்ணெண்ணையே எடுத்துவரப்பட இருப்பதாக கூறப்படுகிறது.

கூட்டுப்படைகளின் தலைமையக உதவிப்பணிப்பாளரான திரு. கனகரட்ணா என்பவர் யாழ். குடாநாட்டிற்கு எந்தவகையான அத்தியாவசியப் பொருள்களும் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுப்பதில் தீவிர கவனம் செலுத்துபவராகவும், வடபகுதிககு எடுத்துச் செல்ல தடைவிதிக்கப்படாத சில பொருள்களைக் கூட யாழ். மாவட்டத்திற்கு அனுப்பி வைப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை என்றும் கூறப்படுகிறது.

மேலும் கடந்தமாதம் இறுதியில் யாழ். அரசாங்க அதிபருக்கும் அத்தியாவசிய சேவைகள் பகுதி அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற உரையாடலின் போது பருத்தித்துறைக்கும் திருக்கோணமலைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிப்பது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது, இதற்கும் கூட்டுப்படைகளின் தலைமையகம் கொள்கையளவில் அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் இதுவரை மேற்படி கப்பல் சேவையை மேற்கொள்வது தொடர்பான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அறிய முடிகிறது.

## விசேட கூட்டம்

(சுன்னாகம்)

உடுவில் பிரிவுசெஞ்சிலுவை சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் தலைவர் நகுல்ரஜ்த லைமையில் நேற்று காலை இணுவில் சைவ மகாஜனக் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இதுகால வரையான செயற்திட்டங்கள் பற்றிய ஒரு நோக்கும், எதிர் வரும் காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

## 'விடுதலைப் புலிகள்' நாளைவெளிவரும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான -''விடுதலைப்புலிகள்'' இதழின் குரல் 31 [ஆனி. ஆவணி 1992] வது வெளியீடு நாளை வெளிவருகின்றது.

''புலிகளின்சிறப்புவேவுப் பிரிவு படைத்த, வரலாற்றுச் சாதனை'' என்ற பிரதான தலைப்புடன் வெளிவரும் இந்த ஏட்டில், 'மத சுதந்திரமும் புலிகளும்' என்ற கொள்கை விளக்கக் கட்டுரையுடன், ''பதுக்கல் ஒரு மக்கள் விரோதச் செயல்'', ''போர் முனைச் செய்திகளில் சிறிலங்காவின் புளுகுகள்'' என்ற தலைப்புகளிலான கட்டுரைகளும் மேலும் பல அம்சங்களும் உள்ளடங்கி உள்ளன.

# காங்கிரஸ் - அ. தி. மு. க. உறவில் நெருக்கடி

## - ஜெயலலிதாவின் பேச்சின் எதிரொலி

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் தமிழ் நாடு ஜெயலலிதா அரசை விட்டு வெளியேற வேண்டும் என்று இறுதி எச்சரிக்கை விடுககபபட்டுள்ளது.

கடந்த தேர்தல் அ இ அ திராவிட முன்னேற்றக்கழகம் இந்திரா காங்கிரஸ்சுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைக் கைப் பற்றியது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் அமைப்புக்குள்ளாக கூட்டாட்சி உறவில் முறிவை ஏற்படுத்துவதற்குத் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் கடசியின் தலைவர் மூப்பனார் முபற்சிப் பதாகச் செய்திகள் கூறுகின்றன.

ராஜீவ்காந்தி இறந்ததால் ஏற்பட்ட மக்கள் அனுதாபத்தால் தான் பதவிக்கு வரவில்லை என்றும் தனது வெற்றி மக்களால் முன்பு தீர்மானிக்கப்பட்டதுஎன்றும்ஜெயலலிதா மதுரை மாநாட்டில் பேசிய பேச்சின் விளைவே தலைவர் மூப்பனார் காங்கிரஸ் கூட்டாட்சியை விட்டு வெளியேற வேண்டும் என்ற தீர்மானததை முன்வைத்ததிற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலில் மத்தியக் காங்கிரஸ் அரசிற்கு அ இ அ திராவிட முன்னேற்றக் கழக பதினொரு லோக்சபாஉறுப்பினரின் உதவி தேவைப்பட்டதால் இந்திரா காங்கிரஸ் ஜெயலலிதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காது மௌனமாக இருந்தது கடந்த மாதம் நடந்த குடியரசுத் தலைவர்கள்தேர்தலிலும் அப்படியே.

ஆனால், இப்பொழுது ஜனதா தளத்தில் ஏற்பட்டுள்ள பிரிவால் இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றப் பெரும்பான்மை பலத்துககு ஜெயலலிதாவை எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இல்லாது போய்விட்டதுஎன்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஜெயலலிதாவுக்குத் தன் கட்சியினுள்ளேயே விரிசல்ஏற்பட்டிக்கும் இத்தருணத்தில் இந்திரா காங்கிரஸின்தீர்மானம் ஜெயலலிதாவுக்குப் பெரு நெருக்கடியாக அமையலாம் என்று கூறப்படுகிறது.

## முக்கிய சீக்கிய தலைவர் பொலிசால் சுட்டுக் கொலை

(பஞ்சாப்)

முக்கிய சீக்கிய தீவிரவாத குழுவொன்றின் தலைவரான சுப்தீக்சிங்கை தாம் சுட்டுக் கொன்றுவிட்டதாக பஞ்சாப் மாநில படையினர் கூறுகின்றனர்.

லூதியானாவிற்கு அருகிலுள்ள சோதனைச் சாவடியில் சுப்தீக் சிங்கின் கார் நிற்கத் தவறியதை அடுத்து இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டிற்கு அவர் கொல்லப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பபார் கல்சா இன்ரநாசனல் என்றும் முக்கிய தீவிரவாத குழுவின் தலைவர் இவர் என கூறப்படுகிறது.

## வட்டவை ரீதியாக மாவீரர் அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து இன்றுவரை எட்டாம் மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களை நினைவுகூரும் அஞ்சலிக் கூட்டங்கள் வட்டவை ரீதியாக நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தி வருகின்றனர்.

இன்று சண்டிலிப்பாய் வட்டவை சண்டிலிப்பாய் நந்தன் விளையாட்டுக்கழகத்திலும் 14 ஆம் திகதி கோப்பாய் வட்டவை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, 19 ஆம் திகதி சங்கானை வட்டவை சிலம்புப் புளியடி வைரவர் கோவில், 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் வட்டவை திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை, 29 ஆம் திகதி தெல்லிப்பழை, உடுவில் வட்டவை ஏழாலை முத்தமிழ் மன்றம் ஆகியவற்றில் நடைபெறும். இந்த அனைத்து நிகழ்வுகளும் மாலை 7. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

## வானில் வந்தவர்கள் கொள்ளை

மன்னாரில் இருந்து கொழும்பிற்கு வந்தவர்களிடமிருந்து 19000 ரூபா பணமும் இரண்டு மோதிரங்களும் வானில் வந்தவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, மன்னாரில் இருந்து வந்த பயிர்ச் செய்கை உத்தியோகத்தரையும், அவரின் மூன்று உறவினர்களையும் புறக்கோட்டையில் வைத்து தம்மை இரகசியப் பொலிசார் என்று கூறிக் கொண்டவர்கள் பொலிஸ் அத்தியட்சகரிடம் விசாரணைக்கு அழைத்துச் செல்வதாய் கூறி வானில் ஏற்றிச் சென்றனர்.

பின்னர் பணத்தையும், மோதிரங்களையும் அபகரித்த பின் கொகுவளையில் இறக்கி விட்டுச் சென்றதாய் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 30,000 இலங்கைத் தமிழ் அகதிகளை

# நஷ்ட ஈடு வழங்கியாவது திருப்பியனுப்புவோம்

## சுவிற்சிலாந்து தூதுவர் அறிவிப்பு

(கொழும்பு)

நஷ்ட ஈடு வழங்கி பலவந்தமாகவேனும் அங்குதங்கியுள்ள முப்பதாயிரம் அகதிகளையும் திருப்பியனுப்புவோம் என்று கொழும்பிலுள்ள சுவிற்சிலாந்து நாட்டின் தூதுவர் அன்ரே விரிக் கிரிப்பிள் ரேஸ் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தம்நடைபெற்றாலும் ஏனைய பகுதிகளில் அமைதி நிலவுவதாலும், தமிழ்மக்களுக்கெதிராக அரசாங்கம் பாரபட்சம் எதையும் காட்டாததாலும் சுவிற்சிலாந்தில் தஞ்சம் கோரியுள்ள சுமார் முப்பதாயிரம் இலங்கைத் தமிழர்களும் படிப்படியாகத் திருப்பி

அத்துடன் கடந்த வருடம் மட்டும் சுமார் ஏழாயிரத்து முன்னூறு இலங்கையர் சுவிஸ் சென்றுள்ளனர் என்றும், கடைசியாகச் சென்றவர்கள் முதலில் திருப்பியனுப்பப்படுவார்கள் என்றும் அகதிகளின் வருகையைத் தடுப்பதே நோக்கம் என்றும், அகதிகளைத் திருப்பியனுப்பும் போது யு. என் எச் சி ஆரின் உதவிபெறப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு சுவிற்சிலாந்து நாட்டில் தங்கி இருக்கவில்லை என்றும். புலிகளைத் தடைசெய்யும் நோக்கத்தில் இலங்கை அகதிகள் திருப்பியனுப்பப்படவில்லை மில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் கூறிய அவர், புலிகள் இயக்கத்தின் அலுவலகம் எதுவும் எமதுநாட்டில் இல்லை என்றும், புலிகள் இயக்கத்தை தடைசெய்யும்படி எவரும் எம்மைக் கோரவும் இல்லை என்றும், எனினும் எமது நாட்டில் புலிகள் இயக்கம் தமது இயக்க நடவடிக்கைக்காகபணம்சேர்ப்பது பற்றி எமக்குத் தெரியும் எனவும் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு நல்ல அரசி

மகசின் சிறையில் உள்ள இளைஞரை

## மருத்துவ சோதனை செய்ய நீதிமன்றம் உத்தரவு

மகசின் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கல்முனையைச் சேர்ந்தவரான கோவிந்தன் செங்காதரனை சட்ட வைத்திய அதிகாரி முன் ஆஜர் செய்து வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கும்படி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட இவர் கல்முனை அதிரடிப் படை முகாமில் கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார். சித்திரவதையினால்


## தனிநாடு

மீண்டும் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு இவர்கள்பெரும் திடசங்கற்பம் பூண்டு இருந்ததாகவும் இதன் காரணமாக இந்தியாவில் இருந்து திரும்பும்

களுக்கு கூட்டுப்படைகளின் தலைமையகம் ஆரம்பத்தில் கொள்கையளவில் அனுமதி

களும் படிப்படியாகத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

## 61-ம் நாள் சபிண்டிக்கிரியை
## அந்தியேட்டிக்கிரியை
### அழைப்பிதழ்



தோற்றம் 26 - 03 - 62

மறைவு 11 - 06 - 92

## இரத்தினம் லோகநாதன்
(பெரியதம்பி)

10 - 08 - 92 திங்கட்கிழமை

*11-06-92 இல் பொம்பர் தாக்குதலில் அகால மரணமடைந்த எம் குடும்ப குலவிளக்காய் திகழ்ந்து ஒளி காட்டிய தலைவா கணமேனும் எமைப்பிரியாது நிழலாய் நின்று எமைக்காத்து வந்தவரே; நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் தோன்றாத்துணையாக இருந்து எங்கள் எதிர்கால வளமான வாழ்விற்கு ஆசீர்வதிப்பீரையா.*

பெரியவிளான்
இளவாலை.
[2990]

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
அன்னாரின் குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கத்தில் இலங்கை அகதிகள் திருப்பியனுப்பப்படவில்லை என்றும், புலிகள் இயக்கத்தை சுவிட்சிலாந்து அரசு அங்கீகரிக்கவில்லை என்பதால் தடை செய்வது என்ற பேச்சுக்கு இட

றத் தெரிவுக்குழு நல்ல அரசியல் தீர்வொன்றை முன்வைக்கும் எனத் தான் நம்புவதாகவும் சுவிற்சிலாந்து தூதுவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## அகதிகள் குடியிருப்புகள் தாண்டிக் குளத்தில் தீக்கிரை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து திரும்பி தாண்டிக்குளத்தில் தங்கியிருந்த அகதிகளின் குடியிருப்புகள் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு தீச்கிரையானதாக தெரிய வருகிறது

இவ் இடத்தில் சுமார் இருநூறு அகதிகள் தங்கியிருந்தார்கவும், குழந்தைகளும், தாய்மாரும் நிறைந்திருந்த இப்பகுதியில் எவ்வாறு தீ விபத்து நேரிட்டது என்பது பற்றி எதுவும் தெரியவரவில்லை.

## தாண்டிக்குளத்தில் தமிழர்மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் பிரயாணிகள் இராணுவத்தால் சடுமையாகத் தாக்கப்பட்டனர்.

மிக மோசமாகத் தாக்கப்

பட்ட பயணிகள் பலரின் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன இதேபோன்று கடந்த புதன் வியாழன் ஆகிய இரு தினங்களிலும் பிரயாணிகள் இராணுவத்தால் தாக்கப்பட்டனர்.

மேலும் வவுனியா நகரப்பகுதியிலும் தமிழ் மக்கள்மீது சிறிலங்கா இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன,

### இழப்புக்களை

பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கொப்பேகடுவ கடந்த காலங்களில் வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கைகளில் பலபுதிய யுக்திகளைக்கையாண்டார் இனிவரும் காலங்களில் இவ்யுக்திகள் எவ்வாறு கையாளப் படும் என்பதுகேள்விக்குறியாகவேயுள்ளது.

இவ் எதிர்பாராத இழப்புகளினால் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் பின்தள்ளப்படும் பட்சத்தில் இக்கால தாமதத்தைப்பயன் படுத்தி புலிகள் முன்னேறிச் செல்ல வாய்ப்பு ஏற்படும் எனவே விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை தாமதிக்காது தொடரவேண்டிய ஒரு நிலை இராணுவததிற்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

### இறந்த

கிறது.

கடற்படை லெப்டினன்ட் லங்கா திலகவிற்கு லெப்டினன்ட் கொமான்டர் என்ற பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

### வீரச்சாவு

வீரச்சாவு அடைந்த லெப்டினன் ஆனந்தகுமார் (சாள்ஸ் பாலசுப்பிரமணியம் தெய்வேந்திரன் சித்தன்கேணி, வட்டுக்கோட்டை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மன்முறையிட்டு நீதிமன்றம உத்தரவிட்டுள்ளது என தெரியவருகிறது.

மேற்படி இளைஞனின் தந்தை தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவிலேயே இந்த

வதைக்கு உட்படுத்தப்பட்டார். சித்திரவதையினால் அவருக்கு சலத்துடன் இரத்தப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது என தெரியவருகிறது.

கொக்கட்டிச்சோலை படுகொலை

## இராணுவ நீதிமன்றில் இன்று விசாரணை

(கொழும்பு)

கொக்கட்டிச் சோலையில் சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் 67 தமிழ் கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக இன்று விசாரணை ஆரம்பமாகிறது

இது தொடர்பாக ஒரு அதிகாரி உட்பட பதினெட்டுஇராணுவ வீரர்கள இன்று இராணுவ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் என்று இராணுவ தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

சென்ற ஆண்டு ஜூன் 12 ஆம் திகதி மட்டக்களப்புக்கு அருகில் உள்ள கொக்கட்டிச் சோலை என்ற கிராமத்தில் இராணுவ வீரர்கள் நிலக்கண்ணி வெடித்ததில் கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் சிலர் பழிவாங்கும் நோக்குடன் கொக்கட்டிச்சோலைப் படுகொலையைச் செய்தனர்.

முன்பு படுகொலைகள் தொடர்பாக நடந்த விசாரணையில் படுகொலையுடன்

சம்பந்தப்பட்ட இராணுவத்தினரின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்வதற்கு அழைக்கப்படவில்லை. அனைத்துலக ஸ்தாபனங்கள் கொடுத்த நெருக்குதலைத் தொடர்ந்து இந்தப் படுகொலை பற்றிய விசாரணையின் அறிக்கை சென்ற ஆண்டு வெளியிடப்பட்டது.

பழிவாங்கும் நடவடிக்கையாக இந்தப் படுகொலைகள் நடாத்தப்பட்டதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. அதனைத் தொடர்ந்தே இராணுவ நீதிமன்றத்தில் இந்த விசாரணை இன்று ஆரம்பமாகிறது.

### யுத்தத்தை

தற்போது அனுபவித்து வருகின்றது. அரசு இனியாவது எதிரியை இனம் கண்டு அழிக்க முன்வரவேண்டும் என ஈ. பி. ஆர். எல். எவ். கேட்டுள்ளது.

### சோகத்தில்

தியைக் கேட்ட துயரத்தால் இவ்வாறு பிரஸ்தாபித்தார் என்றும் ஒப்சேர்பர் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து திரும்பும் இலங்கை தமிழ் அகதிகளை குடியேற்றினர் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அநீதிகளுக்கு தாம் ஒருபோதும் தலைவணங்கப் போவதில்லை என்றும், குறிப்பிட்டார். மேலும் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை சீர் குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரும் சில சக்திகளில் அரசுடன் முன்னர் இருந்தஒருபகுதியினரும் இதில் அடங்கியுள்ளனர் எனத் தெரிவித்தார். உயர் நீதிமன்றத்தினால் பொய்யர்கள் என்று கூறப்பட்டுள்ள இவர்கள் இப்போது தேசிய மட்டத்திலான தேர்தல்களில் நம்பிக்கையை இழந்து போலிக் கையெழுத்துகளை சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

### அடுத்த

களும், வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

இருபத்தைந்தாவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் அமெரிக்காவில் உள்ள அத்திலாண்டா நகரில் நடைபெறும்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

09-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5200

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;

26-403, 42-7975, 42-2323, 27-2034, 41-5417, 26-1658, 24-7961, 26-786, 26-6075, 26-7234, 26-4659, 42-6452. 22-8096, 27-5417, 40-6032, 25-6110, 25-7138.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

28-0657, 22-4710, 28-9186, 24-5509, 26-9158, 28-1110 26-3962, 41-4194, 27-8155, 41-9038, 26-6309, 40-7207